வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் அவர்களின் செயல்முறைகள்
ந.க.எண். **4669** /B4 /**2020** நாள் **04–01–2021**

பொருள் : தேர்வுகள் – வேலூர் மாவட்டம் – தேசிய வருவாய் வழி மற்றும் படிப்புதவித் தொகைத் திட்டத் (NMMS) தேர்வு, பிப்ரவரி **2021** – பள்ளி மாணவர்களின் விவரங்கள் பதிவேற்றம் செய்தல் – தொடர்பாக.

பார்வை : சென்னை அரசுத் தேர்வுகள் இயக்குநர் அவர்களின் கடித ந.க.எண் **027369**/NMMS/2020 நாள் **30–12–2020**

*********

வேலூர் மாவட்டத்தில் **21–02–2021**ல் நடைபெறவுள்ள தேசிய வருவாய் வழி மற்றும் படிப்புதவித் தொகைத் திட்டத் தேர்விற்கு விண்ணப்பிக்க விரும்பும் எட்டாம் வகுப்பு பயிலும் பள்ளி மாணவர்கள் இணையதளம் மூலமாக விண்ணப்பப் படிவங்களை **28.12.2020** முதல் **08.01.2021** வரை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

<u>பதிவேற்றம் செய்தல் தொடர்பான விவரங்கள்;–</u>

மேற்குறிப்பிட்ட தேர்விற்கு விண்ணப்பித்த எட்டாம் வகுப்பு பள்ளி மாணவர்களின் விவரங்களை சம்பந்தப்பட்ட தலைமையாசிரியர்கள் www.dge.tn.gov.in என்னும் இணையதளம் மூலமாக **05.01.2021** முதல் **12.01.2021** வரை பதிவு செய்யலாம் என தலைமை ஆசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

<u>அறிவுரைகள்</u>

1. கடந்த ஆண்டைப் போலவே இந்த வருடமும் EMIS– ன் அடிப்படையில் மாணவர்களின் பதிவு நடைபெறவுள்ளது. எனவே, பள்ளிகளுக்கான USER ID, PASSWORD – ஐ பயன்படுத்தி மாணவர்களின் EMIS எண்ணினை பதிவு செய்தவுடன் பெரும்பாலான விவரங்கள் உடனடியாக திரையில் தோன்றும். அதில் ஏதேனும் திருத்தங்கள் இருப்பின், திருத்தங்களை மேற்கொள்ளவும், விடுபட்டுள்ள விவரங்களையும், புகைப்படத்தையும் பதிவேற்றம் செய்தால் போதுமானதாகும். புதியதாக பள்ளிகள் இணைப்பில் குறிப்பிட்டுள்ள நடைமுறைகளின்படி பதிவு (Register) செய்த பின் புதிய USER ID, PASSWORD – ஐ பயன்படுத்தி மாணவர்களின் விவரங்களை பதிவேற்றம் செய்து கொள்ளலாம் .

__பதிவேற்றம் செய்யும் போது நினைவில் கொள்ள வேண்டிய விவரங்கள்:__

2. தேர்வர்கள் விண்ணப்பத்தில் பூர்த்தி செய்துள்ள விவரங்கள் சரிதானா என்பதனைப் பள்ளி ஆவணங்களை ஒப்பிட்டு சரிபார்த்த பின்னர் பதிவேற்றம் செய்ய வேண்டும்.
3. மாற்றுத்திறனாளிகளுக்கான தேசிய அடையாள அட்டையின் மாணவர்களிடமிருந்து பெற்று இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட வேண்டும்.
4. பள்ளி முகவரி என்ற கலத்தில் பள்ளியின் பெயர், முகவரியினை அஞ்சல் குறியீட்டுடன் (Pin Code) பதிவு செய்யப்படவேண்டும்.
5. வீட்டு முகவரி என்ற கலத்தில் பள்ளியின் பெயர் மற்றும் முகவரியினை பதியக்கூடாது. தேர்வரின் வீட்டு முகவரி மட்டுமே பதியப்படவேண்டும்.
6. பெற்றோரின் தொலைபேசி/கைப்பேசி என்ற கலத்திலும் பெற்றோர் அல்லது பாதுகாவலரின் தொலைபேசி/கைபேசி எண்ணையே பதிய வேண்டும். பள்ளியின் தொலைபேசி என்ற கலத்தில் மட்டும் பள்ளியின் தொலைபேசி எண்ணினை பதிந்தால் போதுமானது.
7. பதிவு செய்த விவரங்களை Declaration form Print out கொண்டு சரியான முறையில் பதிவு செய்யப்பட்டுள்ளதை உறுதி செய்து கொள்ளவும்.
8. 05.01.2021 பிற்பகல் முதல் 12.01.2021 வரை பதிவேற்றம் செய்த விவரங்களில் மாற்றம் ஏதேனும் இருப்பின் 12.01.2021 –க்குள் சரி செய்து கொள்ளலாம். அதன் பின் எந்த பதிவுகளும் கண்டிப்பாக மாற்ற இயலாது.

பதிவேற்றம் முடிந்தவுடன் Summary Report மற்றும் தேர்வர்களின் விவரத்தினை (ஒரு தேர்வருக்கு ரூ.50/– வீதம்) வேலூர் மாவட்ட கல்வி அலுவலர்களிடம் 20.01.2021 –க்குள் ஒப்படைக்குமாறு அனைத்து பள்ளிகளின் தலைமையாசிரியர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

| | |
|---|---|
| விண்ணப்பம் பதிவேற்றம் செய்யும் காலம் | : 05.01.2021 – 12.01.2021 |
| விண்ணப்பங்களைப் பதிவேற்றம் செய்ய கடைசி நாள் | : 12.01.2021 |
| Summary Report தொகையை மாவட்டக் கல்வி அலுவலகத்தில் ஒப்படைக்க வேண்டிய நாள் | : 13.01.2021 – 20.01.2021 |

நிர்ணயிக்கப்பட்ட கடைசி தேதிக்குப் பிறகு எக்காரணத்தை முன்னிட்டும் வாய்ப்பளிக்க இயலாது எனவும், புறச்சரக எண் (Out of Range number) கண்டிப்பாக வழங்கப்படமாட்டாது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

விண்ணப்பங்கள் உரிய இணைப்பு சான்றிதழ்களுடன் சம்பந்தப்பட்ட பள்ளிகளின் தலைமையாசிரியர்கள் வசம் வைத்துக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

மேற்குறிப்பிட்ட பணி அதிக முக்கியத்துவம் வாய்ந்தது என்பதால் மாணவர்களின் நலன் கருதி தங்களின் முழு ஒத்துழைப்புடன் செயல்படுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்

<u>இணைப்பு.</u>
EMIS மூலம் பதிவேற்றம் செய்வதற்கான வழிமுறைகள்

<u>நகல்.</u>

1. அனைத்து அரசு / நகரவை / ஆதிதிராவிட நல ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, உயர் மற்றும் மேல்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர்கள் மற்றும் நிதியுதவி பெறும் பள்ளிகள்

2. வேலூர் மாவட்ட கல்வி அலுவலருக்கு தகவலுக்காகவும் தொடர் நடவடிக்கைக்காகவும் அனுப்பலாகிறது.